LIBRARY
25 NOV 1968
STATE LEGISLATURE, MADRAS

தமிழக சட்டப் பேரவை

திங்கட்கிழமை, 1968 பிப்ரவரி 19

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் முற்பகல் 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர், **திரு. சி. பா. ஆதித்தனர்** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்-விடைகள்

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்

Periyar and Mettur Power Houses.

* 2 *Q.*—THIRU G. GOMATHISANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) whether the Periyar and Mettur Power Houses have been shut down recently ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ) மேட்டூர் சுரங்க மின் நிலையம் ஓர் ஆண்டில் சுமார் 7 திங்கள்களுக்கு மட்டுமே, அதாவது ஜூன் முதல் ஜனவரி வரையில் மட்டுமே, ஏரி நீர் மட்டம் 710 அடியைத் தொடுகின்ற வரையில் செயல்படுமாறு அமைக்கப்பட்டுள்ளது. 7—1—1968-ல் நீர் மட்டம் 711.3 அடிக்குக் கீழே சென்றபோது இம் மின் நிலையம் மூடப்பட்டது எனினும், பழைய மேட்டூர் அணை மின் நிலையம் செயல்பட்டு வருகின்றது. பெரியாறு மின் நிலையம் ஓர் ஆண்டில் 9 திங்கள்களுக்கு, அதாவது ஜூன் முதல் பிப்ரவரி வரை, பெரியாறு ஏரியின் நீர் மட்டம் 109 அடியை தொடுகின்ற வரையில் செயல்படமுடியும். 4—2—1968-ல் நீர் மட்டம் 109.2 அடிக்குக் கீழே சென்றபோது அம் மின் நிலையம் மூடப்பட்டது.

திரு. க. கோமதிசங்கர தீட்சிதர் : தலைவர் அவர்களே, எவ்வளவு பவர் இதன் மூலம் குறைக்கப்பட்டிருக்கிறது? இதன் மூலமாக எத்தனை இடங்களில் மின்சாரத் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது ? இன்னும் கேரளம், மைசூர் மாநிலங்களில் விதிக்கப்படும் விலைக்கும் நம்முடைய மாநிலத்தில் விதிக்கப்படும் விலைக்கும் வித்தியாசம் என்ன? நெய்வேலியிலிருந்தே இந்த மின்சாரப் பற்றுக்குறையை ஈடு செய்துகொள்ள முடியாதா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: நான் முதலிலே குறிப்பிட்டபடி இவ்வளவு அளவுக்குக் குறைந்தால் மூடப்பட வேண்டும் என்ற முறையின்படிதான் அந்த அளவு குறைந்து

உடனே மூடப்பட வேண்டிய நிலைமை ஏற்பட்டது. இதன் காரணமாக மின்சாரத் தட்டுப்பாடு ஏற்படுவதற்கு வழியில்லை. நமக்கு 150 லட்சம் யூனிட் தேவைப்படுகிறது. இப்பொழுது குந்தாவிலிருந்து பைகாரா—மோயாரிலிருந்து 15 லட்சம் யூனிட்—சமயநல்லூரிலிருந்து 15 லட்சம் யூனிட், நெய்வேலியிலிருந்து 50 லட்சம் யூனிட்டும், மைசூரிலிருந்து 20 லட்சம் யூனிட்டும் பெறப்படுகிறது. இந்த வகையில் கிடைக்கும் 150 லட்சம் யூனிட் நமக்கு போதுமான அளவு இருக்கிறது. இன்னும் தேவைப்படுமானுல் கூட கொடுப்பதற்கு மைசூர் ஆயத்தமாக இருக்கிறது.

திரு. செ. பாலசுப்பிரமணியன் : இது மாதிரி நீர் மின்சாரத் திட்டங்கள் அடிக்கடி தண்ணீர் தட்டு ஏற்பட்டால் தண்ணீர் குறைந்து மின்சார உற்பத்தி செய்வதற்கு வேண்டிய அளவு தண்ணீர் இல்லாமல் இருப்பதால் நீர் மின்சார திட்டங்களையே முழுவதும் நம்பியிராமல் இம்மாதிரி கஷ்டமான நேரங்களில் மற்ற அனல் மின்சார திட்டங்களின் மூலம் ராஜ்யத்தின் மின்சாரத் தேவையைப் பூர்த்தி செய்துகொள்வதற்கு ஏதாவது திட்டம் வகுத்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே, முன்புமாதிரி நிலைமையில்லாமல் இப்பொழுது தட்டுப்பாடு ஏற்படுகிற சூழ்நிலை ஏற்படவில்லை. ஏனென்றுல் நீர் மின்சாரம் தடைப்பட்டாலும் அனல் மின்சாரத்தை அதிகப்படுத்தும் முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. நெய்வேலியிலிருந்தும் அதிக மின்சார உற்பத்தி செய்யும் முயற்சியும் இருக்கிறது. இன்னமும் அங்கே உற்பத்தியாகும் முயற்சி நடைபெற்றுக்கொண்டு வருகிறது. இதற்கிடையில் மைசூர் மாநிலத்தோடு செய்துகொண்ட ஒப்பந்தத்தின் மூலமாக அதிக மின்சாரம் கிடைக்க வழியிருக்கிறது. ஆகையினுல் தட்டுப்பாடு ஏற்படும் என்று சொல்வதற்கில்லை.

DR. H. V. HANDE : Sir, while we are glad to know from the answer given by the Minister that some arrangement has been made or some understanding has been arrived at between our State and the Mysore State, will the Hon. the Minister be pleased to give us some details of the arrangements that have been made with the Mysore State, the cost per unit and the number of megawatts per day that me are likely to get from the Mysore Government? Will the Government be able to give us some such details so that the anxiety of the House can be sent at rest ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: பேரவைத் தலைவர் அவர்களே, மைசூரிலிருக்கும் ஷாராவதி திட்டத்திலிருந்து இப்போது மின்சாரம் உற்பத்தி செய்கிறுர்கள். 60 கோடி ரூபாய் செலவழித்து மின்சாரத்தை உற்பத்தி செய்து வழங்கும் முயற்சியில் அவர்கள் ஈடுபட்டிருக்கிறுர்கள். ஏற்கெனவே நமக்கும் தட்டுப்பாடு இருந்து அவர்களும் அதிகமாகக் கொடுக்கப்படாத

1968 பிப்ரவரி 19]

சூழ்நிலையில் நாம் யூனிட் ஒன்றுக்கு 9 காசு கொடுத்து வாங்க வேண்டிய நிலையிருந்தது. இப்பொழுது அவர்களுக்கும் அதிகமாக உற்பத்தியாகி நாமும் ஓரளவு சமாளிக்கக்கூடும் என்ற வகையில் விலை குறைவாக இருந்தால் வாங்கிக்கொள்ளலாம் என்ற முறையில் அண்மையில் பேச்சுவார்த்தை நடத்தி முதல் பத்து லட்சம் யூனிட்டுக்கு 5 காசும் அதற்குமேல் நாம் எடுக்கும் மின்சாரத்திற்கு யூனிட் ஒன்றுக்கு 4½ காசு விதமும் கொடுப்பது என்பது இப்போது ஒப்பந்தம் ஆகியிருக்கிறது. அது ஓரளவு நமக்குக் கட்டுப்படி யாகக்கூடிய விலையாக இருக்கிறது. அனல் மின்சார மாகவும் எந்த அளவுக்கு வேண்டுமோ அந்த அளவுக்குக் கிடைக் கிறது. அதன் காரணமாக நிலக்கரியைச் சேமிக்கவும் இதன் வழியாக அமையக்கூடும்.

திரு. வி. கே. கோதண்டராமன் : இப்படி அடிக்கடி மின்சார நிலையம் மூடக்கூடிய நிலைமை ஏற்படுவதன் காரணமாக இதிலே வேலை செய்யக்கூடியவர்கள் பாதிக்கப்படுகிறார்கள் அல்லவா ? அப்படி எவ்வளவு பேர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்? இனி மேல் அப்படி பாதிக்காத நிலைமையிலும் மின்சாரம் தட்டுப்பாடு ஏற்படாத முறையிலும் அதற்காக வேண்டிய ஏற்பாடு செய்ய அரசாங்கத்தின் யோசனையில் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: உறுப்பினர் அவர்கள் கோரிய விவரம் என்னிடம் இல்லை ஆனால் தொழிலாளர்கள் பாதிக்கப்படக்கூடிய சூழ்நிலை எதுவும் ஏற்படாது என்று தான் நான் கூறுகிறேன். ஏனென்றால் மின்சார நிலையத்தை இயக்கு விப்பதற்காக இருக்கும் தொழிலாளர்கள் இருந்தே தீரவேண்டும். நிலையங்கள் இயங்கினாலும் இயங்காவிட்டாலும் அவைகளைப் பாதுகாப்பதற்காக வேண்டி அவர்கள் இருந்தே தீரவேண்டியவர் களாக இருக்கிறார்கள். ஆகையால் யாரும் வெளியேற்றப்படுகிற சூழ்நிலையோ அல்லது வேலையிலிருந்து எடுக்கப்படுகின்ற நிலைமையோ இருக்காது என்று கருதுகிறேன். ஆனால், இதுபற்றிய முழுவிவரம் என்னிடம் இல்லை.

திரு. ஜெ. பெள்ளி கௌடர் : நாட்டுக்கு மின்சாரம் மிகவும் அவசியம் என்ற காரணத்தால் குந்தா மின்சாரத் திட்டத்தை இன்னும் விரிவு படுத்தும் திட்டம் ஏதேனும் உண்டா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: குந்தாத் திட்டத்தை எந்த அளவு விரிவுபடுத்த முடியுமோ அந்த அளவிற்கு விரிவு படுத்தும். அங்கு மின்சாரத்தின் மூலமாக நீர் மின்சாரம் உற்பத்தி செய்யும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள், ஆனால் நீர் மின்சாரம் தான் விலைகுறைவாக அமையும் காரணத்தினால் அந்த வாய்ப்புகள் எங்கெங்கே உண்டோ அதை முழுவதும் பயன்படுத்தும் நோக்கத் தின் அடிப்படையில் திட்டங்களை மேற்கொண்டிருக்கிறார்கள். மேலும் தட்டுப்பாடு ஏற்படாமல் இருக்கும் முறையில்தான் அனல்

மின்சார நிலையம் ஒன்றை எண்ணூரில் அமைத்துக்கொண்டிருக்கிறோம். 1970-ல் இருந்து அதுவும் மின்சாரம் தரும் சூழ்நிலை ஏற்பட்டால் தட்டுப்பாடு குறைய வழி ஏற்படும்.

THIRU K. VINAYAKAM : In view of the abundance of the supply of electric energy in our State as well as the agreement with the Mysore Government for supply of electric energy, are we to take it that there will not be any power-cut this year ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இந்த ஆண்டு மின்சார வெட்டு இருக்காது என்று உறுதியாகச் சொல்லலாம்.

திரு. கே. சகாதேவகண்டர் : அணையிலிருந்து தண்ணீர் நிறுத்தப்பட்டுவிட்டதால் பயிர்கள் ஏதாவது சேதமடையுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அவைத் தலைவர் அவர்களே, மின்சாரத்தைப் பொறுத்த அளவிற்குத்தான் நான் பதில் சொல்ல இயலும். ஆனால் நீர்ப்பாசனம் சம்பந்தமாக பிரச்சினைகள் இருக்குமானால் அதுபற்றி அதற்குரிய அமைச்சர்தான் பதில் சொல்ல முடியும்.

திரு. மு. ச. சிவசாமி : நெல்லை மாவட்டம் பாபநாசம் நீர் மின் திட்டத்தில் இரண்டு ஸ்டேஷன்கள் பரிசீலனையில் இருக்கின்றன. அவை இந்த பட்ஜெட் ஆண்டிலே நடைமுறைக்கு வருமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அதுபற்றிய விவரம் என்னிடம் இல்லை. அதற்குத் தனிக் கேள்வி போடவேண்டும்.

புதிய தொழில்கள் துவக்கம்

* 71 வின.—**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா —

(அ) இந்த அரசு பதவியேற்றதிலிருந்து ஜூன் 15 வரை எத்தனை புதிய தொழில்கள் துவங்குவதற்கு அனுமதி (லைசென்ஸ்) அளிக்கப் பட்டுள்ளது ?

(இ) இதற்கு முன் அனுமதி அளிக்கப்பட்டவையில் எத்தனை தொழில்கள் இந்தக் காலத்தில் (ஜூன் 15 வரை) தொடங்கப் பட்டுள்ளன ?

(உ) சென்ற ஆண்டு இதே சமயத்தில் எத்தனை அனுமதிகள் வழங்கப்பட்டன ? எத்தனை தொடங்கப்பட்டன ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) பத்து.

(இ) ஐந்து.

(உ) வழங்கப்பட்ட அனுமதிகள் ஆறு. தொடங்கப்பட்டவை இரண்டு.